**இலங்கை கலை மன்றம் - 2018**

**---------------------------------------------**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

----------------------------------------

இலங்கை கலை மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வு விடயப்பரப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மன்றத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக் களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 306,441 கிரயமான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 133,900 பெறுமதியான கணனிகள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நாளாந்த நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக தேவையான கணக்காளர் ஆலோசணையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரின் ஒத்துழைப்பு வழங்குமாறு வரிசை அமைச்சிடம் கோரப்பட்ட போதும் அதற்காக இதுவரை பதில் கிடைக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மதிப்பீடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 9 இன் 47(அ) பிரிவின் பிரகரம் இருப்புக்களை கணிக்கும் போது கடைபிடித்த கணக்கீட்டு கொள்கையை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டுமெனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 398,511 தெகைக்கான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் இருப்பு தொடர்பாக கணக்கீட்டு கொள்கையினை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | - மேற்படி - | இருப்புக்களை கணிக்கும் கணக்கீட்டுக் கொள்கை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தினால் மீளாய்வாண்டு முதல் ஊழியர்களின் பிற்பட்ட நலன்களுக்கான ஒதுக்கங்கள் செய்திருந்த போதிலும், ஆண்டிற்கான ஒதுக்கத் தொகையை கணிப்பதற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இல் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தை வடிவமைக்கும் நிறுவனங்களின் அண்மைகால வெளியீடுகளின் அடிப்படையில் கொள்கையொன்று தயாரிக்கப்படவில்லை. அவ்வாறான கொள்கையொன்று இல்லாமல் ஊழியர்கள் பெற்ற சம்பளம் மற்றும் சேவைக்காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 05 ஊழியர்களுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 632,000 மற்றும் ரூபா 716,851 ஆன பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நாளாந்த நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் தேவையான கணக்காளர் ஆலோசணையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரின் ஒத்துழைப்பு வழங்குமாறு வரிசை அமைச்சிடம் கோரப்பட்ட போதும் அதற்காக இதுவரை பதில் கிடைக்கவில்லை. | ஊழியர் நலன்களை ஒதுக்கீடுவதற்காக அரசின் சட்ட வரையரைக்குள் இணங்கும் வகையில் கூற்றொன்று தயாக்கப்பட வேுண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1952 இன் 18 ஆம் இலக்க இலங்கை கலை மன்றச் சட்டம் | | | |
| (i) 10(1) உப பிரிவு | ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறை மன்றத்தின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் 2018 ஆம் ஆண்டிற்காக கூட்டமொன்று நடாத்தியிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இலங்கை கலை மன்றத்தின் நிறைவேற்றுக்குழு மற்றும் அரச மதியுரையாளர் சபை உறுப்பினர்கள் நியமனம் பல சந்தர்ப்பங்களில் மாற்றங்களுக்கு உட்பட்டன. இதன் காரணமாக கலை | இலங்கை கலை மன்றச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மன்றத்தின் கூட்டங்களை நடாத்த முடியாதிருந்தது. | |
| (ii) | 11(1) உப பிரிவு | சபையின் நிறைவேற்றுக்குழு நியமனம், 07 ஆவது பிரிவின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறையான நியமனனமொன்றில்லாமல் செயற்பட்ட நிறைவேற்றுக்குழுவின் மூலம் 2018 ஆம் ஆண்டில் சகல செலவினங்களுக்கான அங்கீகாரம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தீர்மானங்களும் எடுக்கப்பட்டிருந்தன. | சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கலை மன்றத்தின் நிறைவேற்றுக் குழு அமைச்சரால் நியமனம் செய்யட்டுள்ளனர். | - மேற்படி - |
| (iii) | 12(1) உப பிரிவு | சபையின் நிறைவேற்றுக்குழு நியமனம், சட்டத்தின் 7(அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட சபையின் 5 உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2018 யூன் 14 ஆந் திகதி முதல் 3 ஆண்டு காலப்பகுதிக்காக கலை மன்றத்தின் தலைவரால் மதியுரை குழு அங்கத்தவர்கள் நியமிககப்பட்டிருந்தனர். | மதியுரை சபைகளின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களை நியமனம் செய்வதற்கு வரிசை அமைச்சிடம் கோரப்பட்டிருந்த போதும் இதுவரை நிறைவேற்றுக்குழு நிறைவேற்றுக் குழுவிற்கு தலைவர் உட்பட இரண்டு உறுப்பினர்கள் மாத்திரம்நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | - மேற்படி - |
| (iv) | 13(2) உப பிரிவு | சபையின் உத்தியோகத்தர்கள்' 05 ஊழியர்களை நியமனம் செய்யும் அதிகாரி மனற்த்தின் நிறைவேற்று சபையாக இருந்த போதும் நியமனம் மற்றும் சேவையில் நிரந்தரம் மன்றத்தின் தலைவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | - மேற்படி - |
| (v) | 23 ஆம் பிரிவு | சபையினால் தயாரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் அமைச்சரால் வர்தத்மானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் மன்றத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை | இது தொடர்பாக சரிப்படுத்தல் தற்போது மேற்கொள்வதற்கு இருப்பதாக கவனம் செலுத்தி குறித்த சீராக்கத்தை மேற்கொள்வதற்கு | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வர்த்தமானி ஊடாக பிரித்தப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 11:10:2 ஆம் பிரிவு | ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் 05 பேர் பதவியை நிரந்தரமாக்கும் திகதி முதல் செயற்படுத்தப்பட்டதன் பிரகாரம் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். | உரிய சரிப்படுத்தல்கள் இப்போது மேறகொள்ளப்பட்டுள் ளன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 264(1) | 05 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 3,492,495 பெறுமதியான கொடுப்பனவு தொடர்பாக பெறுவோரிடமிருந்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான விடுபாடுகள்களை குறைபபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 381(1) | மன்றத்தின் ஆரம்பம் முதல் காணப்படும் வங்கி நடைமுறை கணக்கொன்று ஆரம்பிப்பதற்காக திறைசேரியிடம் கோரப்பட்டி ருக்கவில்லை. | கணக்கு ஆரம்பிக்கும் போது தாமதமொன்று இடம்பெற்றிருந்த போதும் எதிர்காலத்தில் திறைசேரியின் அங்காரத்தை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | -மேற்படி - |

## 2 நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,285,461 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 531,989 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,817,450 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு கிடைப்பனவு ரூபா 1,000,000 ஆல் அதிகரித்தமை மற்றும் மூலதன நிதிஏற்பாடு பெறுவனவு ரூபா 2,020,000 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் 38.7 சதவீதத்தினால் அதிகரித்தமை, வெளியீடுகள் விற்பனை வருமானம் 95.2 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் மூலதன செலவினத்திற்காக நிதிஏற்பாடு பெறுவனவு 100 சதவீதத்தினால் அதிகரித்திருநதது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிககப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 1.1:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 4.4:1 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 3.3.1 ஆல் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வங்கி மீதி 466.11 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் 10.15 சதவீதத்தினால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின விரைவு விகிதமும் கருத்திற்கொள்ளக் கூடியளவில் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் 245.1 ஆல் அதிகரித்தமை நடைமுறைப் பொர்றுப்புக்கள் 10.15 சதவீதத்தினால் குறைவடைந்தமை விகிதம் அதிகரிப்பிற்கு காரணங்களாக இருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 180,000 கூட்டுத் தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் எடுக்கப்படும் அனைத்து முற்பணங்களுக்கு செலவின மதிப்பீடொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | செலவின மதிப்பீட்டின் பேரில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முற்பணம் வழங்கப்பட வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவியணியினர் சேர்ப்பதற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி DMS/E3/ 53/4/311/1 ஆம் இலக்க | இலங்கை கலை மன்றம் கலாசார திணைக்களத்துடன் இணைந்து செயற்படுவதால் | மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையின் பிரகாரம் செயலாளர் பதவிக்காக |

| | | | |
|---|---|---|---|
| | கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர நியமனம் மீளாய்வாண்டு இறுதி வரை மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார். | கலாசார திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்படடார். | நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றான கணக்கு எழுதுனர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு 2018 சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 360,000 படி செலுத்தப்பட்டிருந்தது. | சேவை தேவைப்பாட்டின் பேரில் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இச்சேவையை மேலும் பெற்றுக்கொள்ள நடவடிக்க எடுக்கப்படும். | மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையின் பிரகாரம் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அந் நிதிக்கூற்றுக்கள் 4 மாதங்கள் 09 நாட்கள் தாமதத்தின் பினன்ர் 2019 யூலை 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | குறித்துரைக்கப்பட்ட திகதியில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறித்துரைக்கப்பட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சொகரி சாந்தி கார்மம் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 03 இருமொழி தேசிய கருத்தரங்குகள் நடாத்துவதற்காக ரூபா 2.45 மிலியன் செலவிடப்பட்டிருந்தது. | சபையின் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் சொகரி சாந்திகர்மம் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கலா பூஷணம் விருது விழாவிற்காக | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ரூபா 10.4 கிரயமான 06 நிகழ்ச்சித்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதி வரை நிதிஏற்பாடு வழங்காமை காரணமாக திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்த முடியாமல் இருந்தது. | - மேற்படி - |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 ஏற்பாடுகளின் பிரகாரம் சபையில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒரு நிறுவி இருக்காததுடன் வரிசை அமைச்சின் மூலமும் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு தேவையான பதவியணியினர் எமது நிறுவனத்தில் இல்லாதிருந்தமையால் வரிசை அமைச்சு ஊடாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளுமாறு கோரி அமைச்சு செயலாளருக்கு கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

4.4 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் கலை மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தியிருக்கவில்லை. | காலாண்டிற்கு ஒருமுறை வரிசை அமைச்சு மூலம் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு சமூகமளித்துள்ளோம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |